இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 04.08.2026

# கர்நாடகாவிடம் இருந்து கற்றுக் கொள்!

“காவிரிப் பிரச்சினை தொடர்பாக அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டுவதால் எந்தப் பயனும் இல்லை” என்று அமைச்சர் நிர்மல்குமார் கண்டுபிடித்திருக்கிறார். கத்துக்குட்டிகளும் தற்குறிகளும் அமைச்சர் ஆனால் ஒரு பிரச்சினை எப்படி சிக்கலுக்குள் சிக்கிக் கொள்ளும் என்பதற்கு உதாரணம்தான் நிர்மல்குமாரின் பேட்டி ஆகும்.

**காவிரிப் பிரச்சினை என்றால் என்னவென்றே தெரியாமல் நிர்மல்குமார் நித்தமும் உளறிக் கொண்டு இருக்கிறார். கர்நாடகாவிடம் காவிரி உரிமையை நிலைநாட்டும் முதுகெலும்பு இன்றைய விஜய் அரசுக்கு இருக்கிறதா என்றால் இல்லை. அவர்களது கூட்டணிக் கட்சியான காங்கிரஸ் கட்சிதானே கர்நாடகாவை ஆள்கிறது. ராகுல் காந்தியை வைத்து பேச வேண்டியது தானே? இங்கே தண்டத்துக்கு இரண்டு பேருக்கு அமைச்சர் பதவி கொடுத்து வைத்துள்ளீர்களே! அவர்களை கர்நாடக அரசிடம் பேச வைக்க வேண்டியது தானே?**

கர்நாடகாவிடம் உரிமையை நிலைநாட்ட முடியவில்லை என்றால் பிரச்சினையை ஒன்றிய அரசின் முன்னால் வைத்து பஞ்சாயத்து செய்யச் சொல்லும் துணிச்சலாவது இருக்கிறதா என்றால் அதுவும் விஜய் அரசுக்கு இல்லை. டெல்லி என்றாலே கிலி பிடிக்கிறது. ஒரு பக்கம் கரூரில் 41 பேரைக் கொலை செய்த வழக்கை சி.பி.ஐ. வைத்துள்ளது. இன்னொரு பக்கம் வருமானவரி வழக்குகள், கார் இறக்குமதி வழக்குகள். அதனால் பா.ஜ.க.வையும் பகைத்துக் கொள்ள முடியாது.

**வழக்கம் போல படம் காட்ட நினைத்தார் விஜய். கர்நாடகாவுக்குச் சென்று பேச்சுவார்த்தை நடத்துவதாக நாடகம் நடத்தி, அணைக்கட்டுகளைப் பார்வையிடுவதைப் போல ரீல்ஸ் எடுக்கத் திட்டமிட்டார். இந்தக் கோமாளித்தனம் நடக்கப் போவதை முதலிலேயே தெரிந்து கொண்டு எச்சரிக்கை மணி ஒலித்தார் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள். ‘கர்நாடகம் செல்வதால் எந்தப் பயனும் இல்லை’ என்று உழவர் பெருமக்களும் ஒப்புக் கொண்டு எதிர்ப்பு தெரிவித்தார்கள். ‘திருடனுக்குத் தேள் கொட்டியதைப் போல’ மாட்டிக் கொண்ட த.வெ.க. அரசு, இப்போது மழுப்புகிறது.**

‘தற்போதைய நிலையில் முதலமைச்சர் விஜய், கர்நாடகம் செல்வதற்கான திட்டம் ஏதுமில்லை’ என்று சொல்கிறார் நிர்மல்குமார். இதில் உண்மை என்ன என்பதை கர்நாடக முதலமைச்சர் டி.கே.சிவக்குமார் அம்பலப்படுத்தி விட்டார். ‘கர்நாடகம் வர இருப்பதாக தமிழ்நாட்டில் இருந்து தான் முதல் தகவல் வந்தது’ என்று சொல்லி இருக்கிறார் கர்நாடக முதலமைச்சர். இதன் மூலமாக விஜய் ஆட்சி சொல்வது பொய் எனத் தெரிந்துவிட்டது.

**காவிரிப் பிரச்சினை ஒரு கட்சியின் பிரச்சினை அல்ல. அது தமிழ்நாட்டின் பிரச்சினை. எனவே ஒட்டுமொத்த தமிழ்நாடே ஓரணியில் நின்று குரல் கொடுக்க வேண்டும். மாறாக, தி.மு.க.வை விமர்சிப்பதை மட்டுமே த.வெ.க. அமைச்சர் நிர்மல்குமார் செய்து வருகிறார். அவருக்கு காவிரி பிரச்சினை என்றால் என்ன என்றே தெரியவில்லை. பிரதமர் வி.பி.சிங் அமைத்த காவிரி நடுவர் மன்றமும் தெரியவில்லை. பிரதமர் வாஜ்பாய் அமைத்த காவிரி கண்காணிப்பு ஆணையமும் தெரியவில்லை. இந்த இரண்டையும் இரண்டு பிரதமர்கள் மூலமாகச் செய்ய வைத்தவர் அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள். 1990 முதல் காவிரியில் தண்ணீர் வர நடுவர் மன்றமும் கண்காணிப்பு ஆணையமும் தான் காரணம். ஆனால், ‘பிரச்சினையே கலைஞரால்தான்’ என்று கம்பி கட்டுகிறார் நிர்மல்குமார். தனது ஆட்சி என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யாமல் வழக்கம் போல திசை திருப்பவே த.வெ.க. அரசு திட்டமிட்டு செயல்படுகிறது. இந்தச் சண்டையை ரசிக்கிறது கர்நாடகம்.**

கர்நாடக அரசும் அரசியல் தலைவர்களும் தங்கள் மாநிலத்தின் நிலைப்பாட்டை ஓரணியாக நின்று காட்டுகிறார்கள். அங்கு காங்கிரஸும் ஒன்றுதான். பா.ஜ.க.வும் ஒன்றுதான். அனைத்துக் கட்சிகளும் ஒன்றாக இருந்து ஒற்றுமையை நிலைநாட்டுகிறார்கள்.

**கர்நாடக மாநில எம்.பி.க்கள் கூட்டம் டெல்லியில் நடக்கிறது. அனைத்துக் கட்சி எம்.பி.க்களும் வந்து விட்டார்கள். மாநிலத்தை ஆளும் காங்கிரஸ் கட்சியின் முதலமைச்சரும் இருக்கிறார். ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க. அமைச்சர்களும் அங்கு உட்கார்ந்து உள்ளார்கள். நேற்று கூட பெங்களூரில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடந்து, அதில் ஒன்று விடாமல் எல்லா கட்சிப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு ஒருமித்த கருத்தினை வெளிப்படுத்தி உள்ளனர். இதைப் பார்த்தாவது கற்றுக் கொள்ள வேண்டாமா த.வெ.க. அரசு?**

**தமிழ்நாட்டின் ஒற்றுமையைக் கெடுத்த நிர்மல்குமார், ‘கர்நாடக முதலமைச்சரே தி.மு.க. பேச்சைத்தான் கேட்பார்’ என்று சொல்வது எல்லாம் ஆணவத்தின் உச்சம். தான் சொல்லும் சொல்லுக்கு என்ன பொருள் என்றே தெரியாதவர் தான் இப்படி எல்லாம் பேசுவார்? வாய்க்கு வந்ததை உளறுவது என்று இதற்குப் பெயர். இதை ராகுல்காந்திக்கு கடிதமாக எழுதுவாரா விஜய்? காவிரிப் பிரச்சினையை இதை விட மோசமாக யாரும் கையாள முடியாது. இந்த மாதிரியான உளறுவாய்களிடம் ஆட்சி சிக்கி இருப்பதுதான் வேதனையிலும் வேதனை ஆகும்.**

## பிரிட்டிஷாருக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கியவர்

# விடுதலைப் போராளி தீரன் சின்னமலை!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!





**சென்னை, ஆக. 4 -**

**“பிரிட்டிஷாருக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கியவர் - விடுதலைப் போராளி தீரன் சின்னமலை” என்று அவரது நினைவு நாளில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில் புகழாரம் சூட்டியுள்ளார்.**

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**ஆங்கிலேய ஆதிக்கத்தை அசரடித்த வீர வித்து தீரன் சின்னமலை நினைவு நாள்!**

**எத்தனை முறை எத்தகு படைகளைக் கொண்டு தாக்கியும் வெற்றி கொள்ள முடியாத பெருவீரனாகப் போரிட்டவர் தீரன் சின்னமலை.**

**திப்பு சுல்தானுடன் கூட்டணி அமைத்து பிரிட்டிஷாருக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கிய விடுதலைப் போராளி.**

**நேரடியாக எதிர்கொள்ள இயலாத எதிரிகள் சூழ்ச்சியால் அவரைத் தூக்கிலிட்டாலும் அவர் புகழைத் தமிழ்நாடு போற்றிக் கொண்டே இருக்கும்!**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## சிவகாசியில் உரிமம் பெற்ற

# பட்டாசுத் தொழில் முனைவோரை ‘ஆய்வு’ என்ற பெயரில் நசுக்குவதா?

## த.வெ.க. அரசுக்கு – முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு கண்டனம்!



**சிவகாசி, ஆக. 4 -**

**சிவகாசியில் உரிமம் பெற்ற பட்டாசுத் தொழில்முனைவோரை “ஆய்வு” என்ற பெயரில் நசுக்குவதா? என முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு த.வெ.க. அரசுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.**

*இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-*

*தமிழ்நாட்டின் பொருளியல் வரைபடத்தில் மிக முக்கியப் பங்கு வகிக்கும் விருதுநகர் மாவட்டத்தின் அச்சாணியாகவும், லட்சக்கணக்கான ஏழை - எளிய தொழிலாளர்களின் வாழ்வாதாரமாகவும் திகழ்வது சிவகாசி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளின் பட்டாசு உற்பத்தித் தொழிலே ஆகும். ஆண்டுக்கு ஏறத்தாழ ரூ.6000 கோடி அளவில் வர்த்தகம் நடக்கும் இத் தொழிலை நம்பி ஏறத்தாழ 7 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பணி செய்கின்றார்கள்.*

*நமது நாட்டின் மொத்தப் பட்டாசுத் தேவையில் 80 சதவீதத்திற்கும் அதிகமாகப் பூர்த்தி செய்து, பல்லாயிரக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரமாக இருக்கும் இந்தத் தொழிலும், அதனை நம்பியிருக்கும் மொத்தம் மற்றும் சில்லறை வணிகர்களும், தொழிலாளர்களும் இன்று த.வெ.க அரசின் தேவையற்ற கெடுபிடிகளினால் பேரதிர்ச்சிக்கு ஆளாகியுள்ளனர்.*

*சட்டவிரோதமாகப் பட்டாசு தயாரிப்பில் ஈடுபடுபவர்கள் மீதோ, அல்லது பாதுகாப்பு விதிகளை புறக்கணித்து, சட்டவிரோதமாக செயல்படுபவர்கள் மீதோ சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை யாரும் தவறு என்று சொல்லப்போவதில்லை. மனித உயிர்களின் பாதுகாப்பும். விதிமுறைகளைப் பின்பற்றுவதும் எப்போதுமே முதன்மையானவை என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.*

*ஆனால், அரசின் அனைத்துச் சட்டத்திட்டங்களுக்கும் உட்பட்டு, உரிய அரசுத் துறைகளிடம் நாக்பூர் உரிமம், மெட்ராஸ் உரிமம் மற்றும் முறையான உரிமங்களைப் பெற்று, ஆண்டுதோறும் அவற்றை முறைப்படி புதுப்பித்துத் தொழில் நடத்தி வரும் பட்டாசுத் தொழிற்சாலைகள் மற்றும் விற்பனையகங்களில், அதிரடி ஆய்வு” என்ற பெயரில் அரசு நிர்வாகமும் அதிகாரிகளும் நடத்தி வரும் அச்சுறுத்தல்களும் கெடுபிடிகளும் கடும் கண்டனத்திற்குரியவை*

*தீபாவளிப் பண்டிகை நெருங்கி வரும் இக்காலகட்டத்தில், பட்டாசு உற்பத்தியும் விற்பனையும் அதிகரிக்கவிருக்கும் நேரத்தில், அதிகாரிகளின் இந்தத் தேவையற்ற அதிரடி சோதனைகள் தொழில்முனைவோரிடையே பெரும் அச்சத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளன.*

*சட்டப்பூர்வமாக வரி செலுத்தி, உரிமம் பெற்று வணிகம் செய்யும் வர்த்தகர்களைக் குற்றவாளிகளைப் போல நடத்தி, ஆய்வுகள் என்ற பெயரில் அவர்களின் அன்றாடச் செயல்பாடுகளை முடக்குவது எந்தவிதத்தில் நியாயம்?*

*இந்தத் தொழிலில் பெருமளவில் கிராமப்புறப் பெண்களும், எளிய மக்களுமே ஈடுபட்டுள்ள நிலையில், அரசின் தேவையற்ற கெடுபிடிகளால் தொழிற்சாலைகளும் கடைகளும் முடங்கும் போது. இந்தத் தொழிலாளர்கள் அன்றாட ஊதியமிழக்கும் அவல நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.*


*அவர்களின் வாழ்வாதாரம் முழுமையாக பாதிக்கப்புள்ளாகும் நிலையும் உருவாகியுள்ளது சிவகாசி மாநகரத்தின் வர்த்தகச் சங்கிலி அறுந்துபோனால், அது விருதுநகர் மாவட்டத்தின் ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தையும், மாநிலத்தின் வர்த்தகச் சூழலையும் கடுமையாகப் பாதிக்கும் எனவே, சட்டப்பூர்வ உரிமம் பெற்று இயங்கும் பட்டாசுத் தொழிற்சாலைகள் மற்றும் விற்பனையகங்களில் “ஆய்வு” என்ற பெயரில் நடத்தப்படும் அச்சுறுத்தல்களையும். கெடுபிடிகளையும் இந்த த.வெ.க அரசு உடனடியாகக் கைவிட வேண்டும்*

*பட்டாசுத் தொழிலை முடக்குவதற்குப் பதிலாக, வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி, தொழில்முனைவோருக்குத் தேவையான ஆலோசனைகளையும் பாதுகாப்பான வழிகாட்டு நெறிமுறைகளையும் வழங்கும் அணுகுமுறையை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும். வரவிருக்கும் பண்டிகைக் காலத்தைக் கருத்தில் கொண்டு.*

*பட்டாசு உற்பத்தியாளர்களும் விற்பனையாளர்களும் எவ்வித அச்சமுமின்றித் தங்களது வணிகத்தைத் தொடரத் தேவையான சூழலை அரசு உடனடியாக உருவாக்க வேண்டும்.*

*உரிமம் பெற்ற உற்பத்தியாளர்களையும், விற்பனையாளர்களையும், வணிகப் பெருமக்களையும் அச்சுறுத்தும் போக்கு தொடருமானால், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அனுமதி பெற்று பட்டாசுத் தொழில் உரிமையாளர்கள் மற்றும் லட்சக்கணக்கான தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்கச் சிவகாசியில் மாபெரும் ஜனநாயக வழியிலான போராட்டத்தை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம் முன்னெடுக்கும்.*

*இவ்வாறு முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.*



சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை தாலுகா காரமாங்குடியில் முன்னாள் எம்.எல்.ஏ. சைதை கா.கிட்டுவின் 15வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் அவரது திருவுருவச் சிலைக்கு முன்னாள் அமைச்சர் – சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அவரது மனைவி வள்ளியம்மாள், மகன் கருணா கிட்டு, ஒன்றியச் செயலாளர்கள் நாகனிஆர்.ரவி,வே.பூபாலசிங்கம்,லெ.மு.ரவிச்சந்திரன், தேவகோட்டை நகரக் கழகச் செயலாளர் பெரி.பாலா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் உட்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.